அதன் அடிப்படையில் பார்வை 3-ல் காணும் 05.07.2024 - ஆம் நாளில் சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடத்தினை பதிவு துறையின் மூலம் பதிவு செய்து முறையாக ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 2-ல் காணும் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு நில பயன் மாற்றம் சான்றிற்கு சந்தை மதிப்பு தொகையில் 3% சதவீதம் தொகையை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. பார்வை 3-ல் காணும் பதிவுத்துறை கடிதத்தில் 1 ஏக்கர் 82 செண்ட் பரப்பளவிற்கு ரூ.7500/- 3% மதிப்பு ரூபாய் (ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) 24.06.2024 அன்று மனுதாரரால் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மனை ஒன்றுக்கு சுவராய்வு கட்டணம் ரூபாய்.1000 வீதம் 16x1000=16000 நாள்: 08.07.2024 பெறப்பட்டது. எனவே மேற்படி புல எண்களில் அமையவிருக்கும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்பட்டுள்ளது.

V. தங்கராஜ்.
தலைவர்
தலைவர்
ஊராட்சி மன்றம்,
வடக்குமாதேவி ஊராட்சி,

**பெறுநர்**

1. மாணிக்கம், த/பெ.சௌந்தரராஜன், 40, பஞ்சாயத்து மெயின்ரோடு, பெருங்குடி, சென்னை.

# பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் வடக்குமாதேவி கிராம ஊராட்சி கிராம ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை: V.தங்கராஜ்**

நாள்: 08.07.2024

ந.க.எண்:22

பொருள்: புதிய மனைப்பிரிவு - பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்குமாதேவி கிராம ஊராட்சி புலஎண்.616/3C-ல், 0.78செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட நில பயன் மாற்றம் சான்றுக்கு 3% சந்தை மதிப்பு தொகை செலுத்தப்பட்டது. மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூபாய்.1000 வீதம் பெறப்பட்டது. மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை: 1. மணிகண்டன் த/பெ. சௌந்தரராஜன்

பார்வை: 2. உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை பெரம்பலூர் மண்டலம் அவர்களின் கடித எண். 448/24, நாள்: 26.06.2024.

பார்வை: 3. பதிவுத்துறை ஆவணங்கள் ஒப்படைப்பு நாள்: 05.07.2024.

-----

உத்தரவு:

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்குமாதேவி ஊராட்சி கிராம புல எண்.616/3C-ல், 0.78செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குமாறு பார்வை-1ல் காணும் மனுவில் மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. பார்வை 2-ல் காணும் உதவி இயக்குநர் ஊரமைப்புத்துறை பெரம்பலூர் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடம் ஆகியவற்றை தனிநபரிடம் இருந்து ஊராட்சி மன்ற தலைவர் வடக்குமாதேவி என்ற பெயருக்கு தானமாக பெற்றுக் கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.